**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC), பொள்ளாச்சி**

2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 10 ஆம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.02/2022 இன் அ.வ.எண்.33/2013**

1) பார்வதி (இறப்பு)
2) சாந்தாகுமாரி
3) முத்துகுமார் (இறப்பு மற்றும் விடுவிக்கப்பட்டுள்ளார்)

... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1) ராஜமாணிக்கம் (இறப்பு)
2) லட்சுமி (இறப்பு)
3) R.சுந்தராம் (இறப்பு)
4) R.மோகனராஜ்
5) R.செந்தில்குமார் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 04.01.2024 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.A.கனகராஜ் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்டநிலையிலும், 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.இளங்கோ அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

**ஆணையுரை**

மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு அசல் வழக்கில் திருத்தம் செய்து வழக்கை தொடர்ந்து நடத்த உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை VI விதி 17–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவர். அசல் வழக்கானது சுவாதீன ஒப்படைப்பு பரிகாரம்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் மனுதாரர் பார்வதி அவரது சொத்துக்களை பொறுத்து 2ம் மனுதாரருக்கு கடந்த 10.04.2012 தேதியன்று விடுதலை பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார். மேலும், இறந்துபோன 3ம் பிரதிவாதி அவரது பங்கு சொத்தை பொறுத்து 1ம் மனுதாரர் பார்வதி பெயருக்கு கடந்த 02.07.2013 அன்று விடுதலை பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார். மேலும், வழக்கு சொத்துக்களை பொறுத்து 1ம் மனுதாரர் கடந்த 03.07.2012 தேதியன்று 2ம் மனுதாரர் பெயருக்கு உயில் எழுதிவைத்துள்ளார். பின்னர் கடந்த 21.06.2022 அன்று 1ம் மனுதாரர் இறந்தபிறகு மேற்படி உயில் நடைமுறைக்கு வந்தது. அதன்படி வழக்கு சொத்து 2ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்டதாகும்.

**2.2)** அசல் வழக்கில் 1ம் மனுதாரர் பார்வதி இறப்பு குறித்து மட்டுமே திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, கடந்த 18.04.2012 மற்றும் கடந்த 02.07.2013 தேதிய விடுதலை பத்திரம் மற்றும் கடந்த 03.07.2012 தேதிய உயில் ஆகிய ஆவணங்கள் பற்றிய சங்கதிகள் வழக்குரையில் கூறப்படவில்லை. மேலும் வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் அவர்களது வாரிசுகளாக 4 மற்றம் 5 எதிர்மனுதாரர்களை விட்டுவிட்டு காலமாகிவிட்டார்கள். 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் வழக்கு சொத்தின் அனுபவ சுவாதீனத்தில் உள்ளனர், அதனால் 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் வழக்கு சொத்திலிருந்து வெளியேற்றப்பட வேண்டும். எனவே, மனுவில் கூறியுள்ளவாறு அசல் வழக்கில் திருத்தம் செய்யகோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில்,** 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்டார்கள் என்று வழக்குரையை திருத்த மனுதாக்கல் செய்துள்ளார்கள். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் ஏற்கனவே இறந்துவிட்டநிலையில், அவர்களது வாரிசுகளை கட்சிசேர்ப்பது குறித்து எந்த

நடவடிக்கையும் எடுக்கவில்லை. 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் குறித்து தற்போது தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கல்ல. எனவே, இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**4)** இருதரப்பும் கேட்கப்பட்டது. இரு தரப்பிலும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**5)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

**6)** **பிரச்சினை** :

மனுதாரர்கள் தரப்பில், 1ம் மனுதாரர், 3ம் மனுதாரர் எழுதிவைத்த கடந்த 18.04.2012 மற்றும் கடந்த 02.07.2013 தேதிய விடுதலை பத்திரம் மற்றும் கடந்த 03.07.2012 தேதிய உயில் போன்றவற்றின் சங்கதியை வழக்கில் குறிப்பிடவில்லை என்றும், மேலும் வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் அவர்களது வாரிசுகளாக 4 மற்றம் 5 எதிர்மனுதாரர்களை விட்டுவிட்டு காலமாகிவிட்டார்கள் என்றும், எனவே, மேற்படி மனுவில் கூறியுள்ளவாறு அசல் வழக்கில் திருத்தம் செய்யகோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7)** 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்டார்கள் என்று வழக்குரையை திருத்த மனுதாக்கல் செய்துள்ளார்கள் என்றும், 2 மற்றும் 3 பிரதிவாதிகள் ஏற்கனவே இறந்துவிட்டநிலையில், அவர்களது வாரிசுகளை கட்சிசேர்ப்பது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் குறித்து தற்போது தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கல்ல என்றும், எனவே இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிர்வாதம் வைத்துள்ளார்கள்.

**8)** வழக்கானது இந்நீதிமன்றம் குறிப்பிடும் தேதியில் வழக்கு சொத்தின் சுவாதீனத்தை வாதிகளிடம், பிரதிவாதிகள் ஒப்படைக்ககோரியும், வழக்கு சொத்தில் பிரதிவாதி சட்டவிரோதமாக ஏற்படுத்திய சேதத்திற்கு நஷ்டஈடாக ரூ.27,000/– செலுத்தகோரியும், பிரதிவாதி வழக்கு சொத்தில் சட்டவிரோதமாக தொழில்செய்து வருவதால், மேற்படி வழக்கு சொத்தின் சுவாதினத்தை வாதிகளிடம் ஒப்படைக்கும் வரை மாதம் ரூ.750/– பிரதிவாதி செலுத்தகோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9)** அசல் வழக்கானது வழக்குரையின் பரிகார பகுதியில் ஏற்பட்டுள்ள சந்தேகத்தை தெளிவுபடுத்த பட்டிலிடப்பட்டிருந்தபோது இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்குரையை திருத்தம் செய்யகோரி 2ம் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் மனுதாரர் பார்வதியம்மாள் தனது சொத்தை பொறுத்து கடந்த 18.04.2012 அன்று 2ம் மனுதாரருக்கு பாகபாத்திய விடுதலை பத்திரம் ஏற்படுத்திகொடுத்துள்ளார் என்பதும், மேலும் 1ம் மனுதாரர் அவரது மகளான 2ம் மனுதாரர் பெயருக்கு உயில்சாசனம் எழுதி பதிவுசெய்துள்ளார் என்பதும் இம்மனுவுடன் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணத்தை பரிசீலனை செய்கையில் தெரியவருகிறது.

**10)** எதிர்மனுதாரர்கள் தரப்பில், 2 மற்றும் 3 பிரதிவாதிகள் ஏற்கனவே இறந்துவிட்டநிலையில், அவர்களது வாரிசுகளை கட்சிசேர்ப்பது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தங்களது எதிருரையில் குறிப்பிட்டுள்ளார்கள். அவ்வாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டபிறகு மனுதாரர் தரப்பில் உரிய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, 2 மற்றும் 3 பிரதிவாதிகள் இறப்பு குறித்து உரிய திருத்தங்களும் இம்மனுவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட எதிவாதத்தை தவிர மனுதாரர் இம்மனுவில் கோரியுள்ள திருத்தங்களை பொறுத்து எவ்வித மறுப்பும் எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்படவில்லை.

**11)** இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவொரு பாதகமும் ஏற்படாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இம்மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு 1ம் மனுதாரர் மற்றும் 3ம் மனுதாரர் ஏற்படுத்திய விடுதலை பத்திரங்கள், உயில் மற்றும் 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் இறப்பு குறித்த தகவல்களை வழக்குரையில் சேர்த்து திருத்தம் செய்வதால் அசல் வழக்கின் தன்மை மற்றும் தரப்பினர்களின் உரிமைகள் எதுவும் பாதிக்கப்படாது. இவ்வழக்கை பொறுத்தவரை இந்நீதிமன்றமே முதற்கட்ட விசாரணை நீதிமன்றமாகும். மேலும், பல்வேறு வழக்கு நடவடிக்கைகளை தடுக்கும்விதமாகவும், இவ்வழக்கில் சரியான தீர்வை எட்டுவதற்கும் இம்மனுவை அனுமதிக்கலாம். எனவே, நீதியின் நலன்கருதியும், மனுதாரருக்கு நேரிய வழக்கு விசாரணைக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும் வகையிலும் அசல் வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதியளித்து இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது. எனினும், மனுதாரர்களால் வழக்கில் ஏற்பட்ட காலதாமதத்தை செலவுத்தொகை செலுத்துவதன் மூலம் ஈடுகட்டவேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், மனுதாரர்கள்/வாதிகள் கோயமுத்தூர், மாவட்ட இலவச சட்டஉதவி மையத்திற்கு ரூ.2500/-ஐ வரும் 23.01.2024 தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தும்பட்சத்தில், இம்மனு அனுமதிக்கப்படும். அழைக்க: 23.01.2024.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்ததை என்னால் இன்று (10.01.2024) அவையறிய பகரப்பட்டது.

**(ஒப்பம்)/- N. பாரதிராஜன்**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

..... இல்லை .....

**(ஒப்பம்)/- N. பாரதிராஜன்**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
பொள்ளாச்சி.

---

**அசல் ஆணையுரை**
ஐ.ஏ.02/2022 இன் ஓ.எஸ்.33/2013
நாள் : 10.01.2024
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---